திகைப்பு தரும் தங்க ஸ்தூபி!

Phone No. 4502
விலை அணா ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (17—11—49) வெளியீடு (18—11—49) [இதழ் 93

செய்வதறியாது தவிக்கும் தர்மசங்கடம்!

ஏலம்போட்டு பொதுநலத்துக்குச் செலவிடுவதா? பொருட்காட்சியில் வைத்துப் பூரிப்படைவதா?

———: (O) :———

பண்டிதர் பாராளும் போக்கின் படப்பிடிப்பு!

அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு, 14—11—49ல் பம்பாயில் வந்திறங்கினூர், இத்துணைக் கண்டத்தின் பிரதமர் பண்டித ஜவஹர். பம்பாய் நகர மக்களின் சார்பில், பம்பாய் மேயரும், கா. கமிட்டியின் தலைவருமான பட்டீல், வைரங்கள் பதித்து, தங்கத்தில் செய்யப்பட்டு பன்னிரண்டரை அங்குலம் உயரமுள்ள அசோக ஸ்தூபி ஒன்றை பண்டிதருக்குப் பரிசாக அளித்தார் இருநூற்றி முப்பத்தைந்தேகால் தோலா தங்கத்தால் ஆக்கப்பட்டுள்ளது அது. நடுவில் ஒரு பெரிய வைரமும், அதனைச் சுற்றி 306 சிறு வைரக் கற்களும் அதில் பதிக்கப்பட்டிருக்கின்றன. இது கண்டு பண்டிதர் கவலைகொண்டு கருத்துரை ஒன்று வழங்கியுள்ளார். அதாவது "இவ்வளவு விலையுயர்ந்த ஒன்றை ஏற்பது எனக்கு என்னவோ மனச்சங்கடமாய் இருக்கிறது இதை எங்கேயும் எடுத்துக் செல்லமுடியாது; இது அவ்வளவு கனமானது. பத்திரமாக காப்பாற்றி வைப்பதும் சிரமம்" என்றும், "என் சொந்தக் கருத்து என்னவென்றல் இதை ஏலம்போட்டுப் பணமாக்கி ஏதாவது பொதுக் காரியத்துக்குப் பயன்படுத்துவதற்காக ஒதுக்கிவிடலாம் என்பதுதான்" என்றும் பேசியுள்ளார். இத்துணைக்கண்டத்தின் இன்றைய அரசியல் பொருளாதார நிலையும், இதனையே ஒத்திருக்கிறது பெயரளவில்.

307 வைரக் கற்கள்!
235¾ தோலா தங்கம்!
12½ அங்குலம் உயரம்!
65000 ரூபாய் அதன் விலை!

இந்த விலையுயர்ந்த பொருளைப்பரிசாக அளிக்கிறர், பம்பாய் நகர மேயர், பட்டீல் நமது பிரதமர் பண்டித ஜவகருக்கு! இதுகண்டு பண்டிதர் சந்தோஷப்படவில்லை; சஞ்சலம் அவரிடத்தில் குடியேறுகிறது. ஏன் மகிழ்ச்சிகொள்ள வேண்டியதைக்கண்டு, மருட்சியடைகிறர், மன வேதனையடைகிறர்? என்ன காரணம் இதற்கு?

நினைத்தபடி எடுத்துச் செல்ல முடியாதே இதை, என்பதற்காகவா பண்டிதர் சஞ்சலப்பட்டிருப்பார் என்று கருதுகிறீர்கள்? ஒருக்காலும் இருக்கவே இருக்காது. பத்திரமாகக் காப்பாற்ற முடியாதே, என்பதற்காக இந்த மனப்புழுக்கம் ஏற்பட்டிருக்க இடமுண்டா? ஓரளவு இதில் உண்மை இருக்கலாமேயன்றி, முழு உண்மையும் இதுதான் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விலையுயர்ந்த பரிசுக்கு அவசியமென்ன? இதற்கு எவர் எவர் பொருள் கொடுத்திருப்பர்? எந்தெந்த வகையில் அப்பொருள் ஈட்டப்பட்டது? என்பனபோன்ற சந்தேகங்களெல்லாம் பண்டிதருக்கு ஏற்படாமல் இருந்திருக்க முடியுமா? பம்பாய் மக்கள் பெயர் கூறி, வேறு எவராவது இப்பரிசை அளித்திருந்தாலாவது, இதுபோன்ற ஐயங்கள்பண்டிதருக்குத் தோன்றுமல் இருந்திருக்கலாம். கொடுத்தவர் மேயர் பட்டீல் ஆயிற்றே? பட்டீல் எவருடைய 'வேட்டை' என்பதை பண்டிதர் நன்கு அறிந்தவராயிற்றே! ஏன் விலையுயர்ந்த பரிசைக் கண்டதும் பண்டிதருக்கு மனவேதனை ஏற்படாது? நிற்க,

வைர, தங்க ஸ்தூபியைக் காட்டிலும் விலையுயர்ந்த பொருள் மற்றொன்று இருக்கிறது. இன்னவிலைதான் இருக்கும் என்று எவராலும் வரையறுத்து மதிப்பிட்டுக் கூற முடியாத பொருள்-பண்பு அது. அதற்காக இத்துணைக் கண்டத்து மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஏராளம். அதனை உருவாக்குவதற்காக தங்கள் ஆவியைக் கொடுத்தனர். அங்கங்களைத் துண்டாட சம்மதித்தனர், சிறைகளில் சீரழிந்தனர், சிரமங்கள் பலவும் பெற்றனர். இவ்வளவுக்குப் பின்னர் உருவான அரசியல் 'சுதந்திர' பரிசை, பண்டித ஜவகரிடம் மனமாற ஒப்படைத்தனர். பலன் என்ன? விலையேறிய வைர ஸ்தூபியைக் கண்டு, பண்டிதர் சங்கடப்படுவது போலவே, விலை மதிக்க முடியாத அரசியல் சுதந்திரம், தம் மீது புகுத்தும் பொறுப்பைக் கண்டும், அவர் சங்கடப்பட்டிருக்கலாம். ஒரு பொருள் பற்றி ஒருவர் சங்கடப்படுவது, அவருக்கிருக்கும் நல்லலெண்ணத்தின் அளவை மட்டுமே எடுத்துக் காட்ட உதவுமேயன்றி, பெற்றுள்ள பொறுப்பைக்கொண்டு, மக்களுக்கு நலம் செய்யும் முறை

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

"இலங்கையிலுள்ள இந்தியர்களுள் பெரும்பான்மையோர் தமிழர்களே"

சென்னை சர்க்கார் சிரத்தை கொண்டால்தான் இந்திய சர்க்கார் ஏதாவதுசெய்வர்

மத்திய விஷயம் என்றுகூறி மழுப்பப் பார்ப்பதா?

சென்னை சட்டசபையில் நடந்த 15-ந்தேதியன்று 'இலங்கையில் இந்தியர் நிலை'பற்றி எழுந்த கேள்விகள் பலவற்றுக்குப் பதிலளித்த மந்திரி தோழர் பக்தவத்சலம், இலங்கையில் வசிக்கும் இந்தியரை நம்பி இங்கு வாழும் குடும்பங்கள் பல போகதிக்கு உள்ளாகி வருகின்றனவென்றும், அவர்களுக்கு அடையாளச் சான்றிதழ்கள் கொடுக்கும் அதிகாரத்தை முனிசிபல் தலைவர்கட்கும் சட்ட சபை உறுப்பினர்கட்கும் வழங்க வேண்டுமென்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்திருப்பதாகவும் இதனைச் சர்க்கார் கவனிக்குமென்றும் இந்திய சர்க்காருக்கு இலங்கையிலுள்ள இந்தியர்—பெரும்பாலும் தமிழர்களே—நிலைபற்றி எழுதியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் இந்தியர்படும் அவதி நாளுக்குநாள் பெருகி வருவதால், அதுபற்றி நமது அபிப்பிராயத்தை விவாதித்துக் கூற ஒரு நாள் ஒதுக்குமா சர்க்கார் என்று தோழர் ஆர். வி. சாமிநாதன் கேட்டதற்கு சபைத்தலைவர் கூறினர்: "இலங்கைப் பிரச்சினை மத்திய சர்க்கார் கவனிக்க வேண்டியதொரு விஷயமாகும். இது விஷயத்தைக் கவனிக்குமாறு இந்தியசர்க்காரை, சென்னை சர்க்கார் ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளது"

தோழர் சாமிநாதன்: அது எனக்குத் தெரியும். இலங்கையிலுள்ள இந்தியர்களுள் பெரும்பாலோர் இம்மாகாணத்தைச் சேர்ந்தவர்களாதலால் அப்படி ஒருநாள் ஒதுக்க வேண்டியது அவசியமென்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். அப்படிச் செய்தால்தான் இந்திய சர்க்காரும் தீவிர நடவடிக்கை மேற்கொள்வர்.

இவ்யோசனையைக் கவனிப்பதாக தோழர் கோபால் ரெட்டி தெரிவித்தார்.

சென்னை அரசியலாரின் 1950-51 வரவு செலவுத்திட்டம்

பிப்ரவரி 27-ம் தேதி வெளியிடப்படும்

சென்னை, நவ. 15—

1950—51ம் ஆண்டு சென்னை அரசியலாரின் வரவு செலவுத்திட்டம் 1950-ம் ஆண்டு பிப்ரவரி 27-ம் நாள் சென்னை சட்டசபையில் அறிவிக்கப்படும் மார்ச் முதல் தேதியிலிருந்து 4-ம் நாள் வரை வரவு செலவுத்திட்டம் பற்றிய விவாதம் நடைபெறும். மார்ச் 10-ம்நாள் முதல் மான்யங்கள் கோரப்படும் மார்ச் 28-ம் நாள் மான்யங்கள் பற்றிய விவாதம் முடிவடையும். மார்ச் 20-ம் நாள் 1949-1950ம் ஆண்டு துணை வரவு செலவுத்திட்டம் வெளியிடப்படும்.

தமிழும் சமஸ்கிருதமும்

"நாமனைவரும் பழந்தமிழிலக்கியங்களைப் புறக்கணித்துவிட்டோம். உலகப் பெருமொழிகளுள் தலைசிறந்தன கிரேக்கம், எபிரேயம், சமஸ்கிருதம், தமிழ் ஆகியவையே. இக்குழுவில் கூறப்பட்ட இதர மூன்று மொழிகளும் இப்போது "செத்தவை" என்று கூறப்படும் அளவுக்கு வந்துவிட்டன; தமிழ் மட்டும் வளமும் வழக்கும் பெரிதும் கொண்டு திகழ்கிறது. எல்லா மொழிகளிலும் உயிரெழுத்துக்கள் மட்டும் ஏறத்தாழ ஒரே தன்மையனவாகவே யிருக்க, தமிழ் மொழியில் மட்டும் ஒரு சிறப்பு என்னவென்றல் அதன் மெய்யெழுத்துக்கள் எளிமையும் இயற்கைத்தன்மையும் கொண்டு திகழ்கின்றன. சமஸ்கிருத மெய்யெழுத்துக்களனைத்தும் தமிழ் மெய்யெழுத்தினடியாகப் பிறந்தவையேயாகும்.

—தோழர் ஆர். கே. சண்முகம்
15—11—'49

அடுத்த களம் பாகிஸ்தானு?

சர்வதேசக் கமிட்டியின் சஞ்சலம்!

ஐரோப்பியப்பிரச்னைகளை ஆய்வதற்கென்று சர்வதேசக் கமிட்டிபோன்ற நிறுவனம்பெற்று வேலை செய்து வருகிறது. அக்கமிட்டியில் அரசியல் மூதறிஞர்கள் பலர் இடம் பெற்றுள்ளனர். ஆசியாவைக் கம்யூனிச மயமாக்க 'ரஷ்யா போட்டிருக்கும் திட்டங்கள்' இவையிவையென அக்கமிட்டி தனது அண்மைய அறிக்கையொன்றில் குறிப்பிடுகிறது

"கம்யூனிஸத்தை யெதிர்த்து இந்தியா தற்காப்பு முயற்சிகளில் ஈடுபட முனைந்து விட்டதை யொட்டி, சோவியத் ரஷ்யா தனது பார்வையை பாக்கிஸ்தான் பேரில் செலுத்தியுள்ளது

"பாக்கிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் இடையே இப்போது வளர்ந்து வரும் குரோதங்களை ரஷ்யா பயன்படுத்திக்கொள்கிறது.

"பாகிஸ்தானில் தனது பொருளாதார— அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள ரஷ்யா தனது 'பொம்மை சர்க்கார்கள்' வீற்றிருக்கும் நடுகள் (குறிப்பாக செக்கோஸ்லோவேக்யா) மூலம் குறைந்த விலையில் சாமான்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துவருவதாக அண்மையில் கிடைத்த தகவல் கூறுகின்றன."

"பீகிங்கில் நடைபெறும் தொழிற் சங்கங்களின் உலக சம்மேளனக் காரியக் கமிட்டிக் கூட்டத்தையடுத்து, ஆசியாவை ஆதிக்கப்படுத்துவதற்கான சோவியத் முயற்சிகள் வருமாண்டில் அதிகரிக்கும்."

மாலை மணி

சென்னை 17—11—49 விய முகக்கிழமை

ஆசை அத்து மீறுகிறது!

இந்தியத் துணைக் கண்டத்தில் மொழிவழி மாகாணங்கள் அமைய வெண்டும் என்ற உரிமை வேட்கைக்குரல், இந்தியத் துணைக் கண்டம் எங்கு னும் இப்பொழுது எழுப்பப் பட்டு வருகின்றது.

மொழிவழி மாகாணம் உடுவாக வேண்டு என்ற உரிமை வேட்கைக்குச் சார்பாகவும், எதிர்ப்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன. கருத்துக்களை, இரு வேறு முகாம்களில் நின்றுகொண்டு பரிமாறுபவர்கள் பெரும் பாலும்காங்கிரஸ்காரர்களாகத் தானிருக்கிறார்கள். மொழிவழி மாகாணம் ஏற்பட வேண்டும் என்ற முறையைப் பண்டு தொட்டு ஒருமுகமாக வற்புறுத்தி வந்தவர்களும் அவர்கள் தாம்; இன்று மொழிவழி மாகாணம் கூடாது என்று கூறுபவர்களும் அவர்களிலே சிலர் தாம்.

உரிமை வேட்கைக்கு மதிப்புக் கொடுக்கக் கருதிய காலத்திலெல்லாம் மொழிவழி மாகாணக் கருத்துக்குச் சிறப்பு செய்து வந்தவர்கள், சுயநலக் கண்கொண்டு செயலிலிறங்கும்போது, மொழி வழி மாகாணம் அமைவதற்கான உரிமையைக் காண மறுத்து, உபயோகமற்றக் காரணங்களைத் தேடிப் பிடிக்கின்றார்கள். இத்தகைய வொரு சுயநல நோய் பொதுவாக மலையாளிகளனை வரையும், குறிப்பாக மலையாளக் காங்கிரஸ்காரர்களையும் இப்பொழுது பிடித்திருக்கிறது.

மலையாளிகள், தமிழ் வழங்கும் பகுதியாகிய நாஞ்சில் நாட்டைத், தமிழகத்தோடு மொழிவழி இணைந்து நிற்கவிட மாட்டார்களாம்; கேரள பகுதியோடு இணைத்து வைத்தே ஆட்சி புரிவார்களாம்; மொழிவழி மாகாணம் அமைவது ஏற்றக்கொள்கை அல்லவாம்; மதச் சார்பற்ற சர்க்காருக்கு அடுத்தது ஆகாதாம்; இப்படி ஒருவர் உளறிக்கொட்டுகிறார், கருத்து மந்தத்தினாலோ அல்லது ஆசை கண்ணை மறைக்கும் என்பார்களே அதனை யொட்டியேற்படும் கண் மங்கலினாலோ! யார் அவர் என்று கேட்க விரும்புகிறீர்களா? அவர்தான் கொச்சி-திருவாங்கூர் சுகாதார மந்திரி தோழியர் அன்னா மாஸ்கரீன்! இது போன்றே அண்மையில் நடைபெற்ற கேரளர் மாநாட்டில் கூடியோரும் நாஞ்சில் நாட்டின் மீது தாங்கள் கொண்டிருக்கும் அத்து மீறிய ஆசையைத் தீர்மான வடிவில் தீட்டியுள்ளார்கள்! அவர்கள் கேரளராகவே வாழ்வார்களாம். நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் அவர்களிடம் அடிமைப்பட்டே கிடக்கவேண்டுமாம்! என்னே அவர்களின் ஆசை! என்னே அம்மையாரின் ஆசை! ஆசை பிறர் உரிமையைப் பறிக்க விரும்புகிறதே! எப்படி இயலும்!

எந்தக் காலத்திலேயோ, எதற்காகவோ, எந்த அடிப்படையிலேயோ ஏற்பட்ட எல்லை அமைப்புகள், தங்களுக்குப் பலன் கொடுக்கக் கூடிய அளவில் இருக்கின்றன என்ற ஒரே சுயநலக் காரணத்தை அடிப்படையாகக்கொண்டு, கொச்சி — திருவாங்கூர் அமைப்பு இப்பொழுது இருப்பது போலவே இருக்கவேண்டும் என்றுவாதிடுகிறார்களென்றால், அதில் நீதியோ, நேர்மையோ, அறிவுடைமையோ இருக்கிறது என்று, எந்த உரிமை வேட்கையுடையார் தான் ஒப்புக்கொள்ளமுடியும்? இப்பொழுது அமைந்திருக்கும் கொச்சி-திருவாங்கூர் அமைப்பு மொழி வழிப்படியும் சரியல்ல; பொருளாதார வழிப்படியும் சரியல்ல, இனவழிப்படியும் முற்றுப் பெற்றதல்ல. மொழி வழி மாகாணம் பிரிய வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்ட பிறகு, நாஞ்சில் நாட்டுப் பகுதியை மலையாளிகள் வசப்படுத்த எண்ணுவதும், சென்னையையும் அதனைச் சார்ந்த பகுதியையும் ஆந்திரர் அபகரிக்கக் கருதுவதும் அல்லது அப்பகுதியை மத்திய அரசாங்கத்தின் கீழ் வைத்து விடநினைப்பதும்வல்லடிவழக்குகள் தொடுப்பதற்கான அறிகுறிகளேயன்றி, வகையான வாழ்வை நாட்டில் உண்டாக்குவதற்கான முறையல்ல!

மொழிவழி மாகாணங்கள் அமைய வேண்டும் என்பதும், அப்படி அமையும் மொழிவழி மாகாணங்களான தமிழகம், ஆந்திரம், கர்னாடகம், கேரளம் ஆகிய நான்கும் பொருளாதாரம்—பாதுகாப்பு — அயல் நாட்டுக் கொள்கை வழி திராவிடமாகத் திகழ வேண்டும் என்பதுதான் நமது கருத்து; ஆவல்; கொள்கை; குறிக்கொள்.

மொழிவழி மாகாணம் பிரிய வேண்டும், நான்கு திராவிட மொழிப் பகுதிகளும் பொருளாதார வழி ஒன்று சேர வேண்டும் என்று வற்புறுத்துவதில் நாம் கொண்டிருக்கும் குறிக்கோள், சுரண்டும்-வடநாட்டு — ஏகாதிபத்ய ஆட்சியின் கீழிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகவேயாம். மொழிவழி மாகாணம் பிரிய வேண்டும் ஆட்சி நிலை சரிபடவாகும்; திராவிடம் பிரிய வேண்டும் என்பது வடநாட்டுச் சுரண்டலிலிருந்து விடுபடவாகும்.

ஆனால் காங்கிரஸ் தோழர்கள் கோருகிறபடி, மொழிவழி மாகாணம் பிரிந்த, மலையாளமும், தமிழகமும் மத்திய அரசாங்கத்தின் கீழிருந்து வருமானம் முழுவதையும் அள்ளிக் கொடுத்துவிட்டு, வாழும் நிலையிலே வைக்கப்படுவதென்றால், மாகாண உரிமை நிலை நாட்டப்பட்டதாகக் கருத முடியுமேயொழிய, பொருளாதார நிலை சீர்ப்பட்டதாகக் கருத முடியாது. மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் பொருளாதார நிலை சீர்பட வேண்டுமானால், திராவிடம் தனியே பிரிவதுதான் ஏற்ற மருந்தாகும்; வெறும் மாகாணங்களை மட்டும் பிரித்துக்கொண்டு, இந்திய மத்திய அரசாங்க ஆட்சியின்கீழ் அடி பணிந்து கிடப்பதால் உருவான பலன் ஏதும் காண முடியாது; மாகாணப் பிரிவினை உரிமை மட்டும் காப்பாற்றப் பட்டதாகக் கருதப்படும்.

மலையாளத் தோழர்களின் ஆசை அத்து மீறுகிறது! ஆசையை அடிப்படையாகக் கொள்ளாமல், நல்வாழ்வுக்கான அமையும் அறிவுடைமையை அடிப்படையாகக் கொண்டு, மொழிவழி உரிமையைத் தாமும் எடுத்துக் கொண்டு, பிறர்க்கும் அளிக்க முன்வந்து பொருளாதாரவழி உரிமையைத், திராவிடமாகப் பெற, மலையாள நண்பர்கள் பாடுபட முன்வருவார்களாக!

தூத்துக்குடிக்கு என். வி. என். வருகை

21—11—49

தூத்துக்குடியில் நாடகங்கள் நடத்துவது சம்பந்தமாகக் கழகத் தோழர்களோடு கலந்து பேசி, கமிட்டி ஒன்று நிறுவ அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தூத்துக்குடிக்கு வருகிறார்கள். 21—11—49ம் நாள் மாலை 4-மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார்.

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்
சென்னை.

"பரம ரகசியம்"!

"சென்னை சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கு மிடையே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றம் பற்றி நடந்த கடிதப் போக்குவரத்துகள் ரகசியமானவையாகும். சட்டசபையில் அவற்றை வெளியிடுதல் பொது நலத்துக்குகந்ததல்லவென்று சர்க்கார் கருதுகின்றன" என்று ரெவினியு மந்திரி தோழர் எச். சித்தாராமரெட்டி யார் 15-ந்தேதியன்று சென்னை சட்டசபையில் தெரிவித்தார்.

அப்படிக் கெடுப்போகும் பொதுநலந்தான் என்னவென்று தோழர் டி. விஸ்வநாதன் கேட்க, 'கடிதப்போக்குவரத்து ரகசியமான தன்மை கொண்டதாகையால், இதற்கு மேல் எதுவும் கூறுவதற்கில்லை" என்று மந்திரி அறிவித்தார்.

தியாகத்தின் விலை!

இரைம் நிலம் கேரி 'அரசியல் சிபகிள் விடுத்துக்கொண்டிருக்கும் விண்ணப்பங்களை விரைவில் ஆலோசித்து ஆவன செய்யும் வகையில் சென்னை சர்க்கார் அண்மையில் மாவட்டந்தோறும் அதிகப்படியான சிப்பந்திகள் வைத்து வேலை செய்ய அனுமதித்துள்ளன. இப்படி அதற்கென அதிகப்படியாக சிப்பந்திகள் நியமிப்பதால் அனால சம்ரூபாய் அதிகம் செலவாமெனக் கூறப்படுகிறது.

திகைப்பு தரும் தங்க ஸ்தூபி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மேற்கொள்ளுகிறார். இல்லையா என்பதை எடுத்துக்காட்ட உதவாதே. அதற்கு வேறொரு அளவையைக் கொண்டல்லவோ தீர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது.

தங்க ஸ்தூபியை பத்திரமாகக் காப்பாற்றி வைப்பது சிரமமாகஇருக்கிறது என்றுப் கவலை கொள்ளுகிறார் ஜவகர்! ஆம்! இன்று சுதந்திரத்தால் கிடைத்த பதவியை, பிறர் பறித்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வது சற்றுச் சிரமமாகத்தான் இருக்கிறது. பண்டிதருக்கு கிடைத்த சுதந்திரத்தைச் சாதனமாகக்கொண்டு எது ஏழை மக்களின் இல்லாமையைப் போக்கும் முறை என்பதை ஆராய்ந்து அறிந்து அதனை நிறைவேற்ற முயன்றிருந்தால், ஸ்தூபியைக் காப்பாற்றுவது சிரமம் என்று அஞ்சுவது போல, கிடைத்துள்ள சுதந்திரத்திற்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, பதவியைப் பாதுகாத்துக்கொள்ள சங்கடம் படத் தேவை இல்லை.

ஸ்தூபியை ஏலம் போட்டு பணமாக்கி ஏதாவது பொதுப் பணிக்குப் பயன்படுத்தலாம் என்று சொந்தத்தில் கருதிக்கொண்டு இருக்கிறதாகப் பண்டிதர் கூறுகிறார்! ஸ்தூபியை ஏலம்போட்டால், அதை எடுக்கக் கூடியவர்கள் யாவர்? எவருக்கு அந்த அளவு பண பலம் இருக்கிறது? இத்துணைக் கண்டத்தை, ஸ்தூபியை ஏலத்தில் எடுப்பதுபோல் எடுத்துக்கொள்ளக் கூடிய பொருள் பலம், இந்த உலகத்தில் எந்த நாட்டுக்கு இருக்கிறது? அமெரிக்கா ஒன்றுதான் இது சாத்தியமாகும்! ஸ்தூபியும் பத்திரமாகக் காப்பாற்றப்படும்! சுதந்திரமும்— பதவியும் பத்திரமாகக் காப்பாற்றப்படும், இந்த ஏல விற்பனையால்!

ஸ்தூபியை பொருட்காட்சி சாலையிலும் வைக்கலாம் என்றும் பண்டிதர் ஆலோசனை கூறியுள்ளார்! அதுவும் சரி! வரலாற்று ஏட்டிலே, இத்துணைக்கண்டம் அரசியல் சுதந்திரம் பெற்றதும், அதனால் பண்டிதர் பதவியில் அமர்ந்ததும், மிகமிக நல்ல முறையில்தானே எழுதப்பட்டிருக்கும், சோகம் - துக்கம்! பண்டிதர் பதவியேற்றதும் மகிழ்ச்சி வெள்ளம்! பின் நிகழ்ந்தன — நிகழ்வன — நிகழப்போவன — நமது சந்தோஷத்தைக் கொலைத்து வரும் சம்பவங்களாகத்தானே இருக்கின்றன!

ஸ்தூபியைப் பண்டிதருக்குப் பரிசளித்தபோது இருந்த மகிழ்ச்சி, பரிசளித்தவர்களுக்குப் பண்டிதரின் பேச்சைக் கேட்ட பிறகு இருந்திருக்க முடியாதல்லவா? பண்டிதர் பதவியேற்ற ஓர் ஒரு சம்பவந்தான் இத்துணைக் கண்டத்தின் வரலாற்றிலே மக்களனைவருக்கும் மகிழ்ச்சி தந்த சம்பவமாகும். பொருட்காட்சி சாலையில்தான் ஸ்தூபியைப் பார்க்க முடியும்! இனி ஏட்டிலேதான் சுதந்திர தினத்தைப் படித்துப் படித்துத் திருப்தியடைய முடியும்!

பண்டிதர், பரிசளித்த ஸ்தூபியைக் கண்டு எப்படிச் சங்கடத்திற்குள்ளானாரோ, அதனையே ஒக்கிருகிறது இத்துணைக் கண்டத்தின் இன்றைய நிலையும் என்ன செய்வது?

இது என்ன இனிக்கிறதா?

"விலைவாசியேற்றத்தைச் சமாளிக்க முடியாமல் மக்கள் திண்டாடி திணறி வருகின்றனர். நேருவைத் தவிர்த்த வேறு எவரையும் பிரதம மந்திரியாகக்கொண்ட வேறு எந்தச் சர்க்காரையும் மக்கள் ஒரு நொடிப் பொழுதில் விழ்த்தியிருப்பர். மக்கள் படும் அவதி அவ்வளவு அதிகமாக இருக்கிறது" —காமராஜர்

சென்னை, 14-11-49

மந்திரிகள் ஏன் வரவில்லை

சட்டசபையில் கேள்வி

"மந்திரிகளெல்லாம் ஆஜராக இல்லாத நிலைமையில் முக்கியமான விவாதம் நடைபெறலாமா" என்று சட்டசபை உறுப்பினர் தோழர் டி. புருஷோத்தமன் என்பவர் அண்மையில் கூடிய சட்டசபைக் கூட்டமொன்றில் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார். அதற்குப் பதில் சொல்லும் முறையில் தோழர் சீதாராமரெட்டி "எல்லா மந்திரிகளும் ஆஜராயிருப்பது சாத்தியமல்ல" என்று பதில் கூறினாராம். பின்னர் சபாநாயகர் "கூடுமான வரையில் சபையிலிருக்கும் மந்திரிகள் ஆஜராக வேண்டும்" என்று தாம் விரும்புவதாகக் கூறினாராம்.

இது சட்டசபை நடவடிக்கைகளில் அடிக்கடி காணப்படும் விசித்திர விவாதங்களில் ஒன்று. மந்திரிகள் சபைக்கு வரவேண்டியது அவர்கள் கடமை. அவர்களை எவ்வித கட்டுப்பாட்டிற்கும் உள்ளாக்காதிருப்பதே முடிவு. ஆனால் நம் நாட்டு மந்திரிகள் இதனை உணர்ந்து நடப்பவர்களாகத் தெரியவில்லை. இதன் விளைவாக மந்திரிகள் ஆஜரானார்களா, இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டிய அனுவசியமான கவலை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அப்படி கவலைப்படும் அன்பர்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் அதிகப்படியான வேலை அவைத்தலைவருக்கு ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட தொல்லையைத் தீர்க்க ஏதாவதொரு ஏற்பாடு செய்தாக வேண்டும். அடிக்கடி சட்டசபையை எட்டிப்பார்க்காத அமைச்சர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது கூட தவறாகாது.

வீடு கட்டும் திட்டங்கள்

வீடுகட்டும் புதிய திட்டங்களைச் சர்க்கார் மேற்கொண்ட 1947 ஜூலை முதல் ஏழு கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் வேலை துவக்கின. 1949-ம் மாத முடிவில் 566 வீடுகள் வேலையாகிக் கொண்டிருந்தன வென்று மந்திரி தோழர் சஞ்சீவிரெட்டி, 15-ந் தேதியன்று சென்னைமேல்சபையில் தெரிவித்தார். இவற்றையின்றி பழைய சொசைட்டிகள் 1946-1949-ல் 461 வீடுகள் வரை கட்டி முடித்திருக்கின்றன வென்று குறிப்பிட்டார்.

மகாத்மாவின் 'ஆத்மார்த்த' சீடர் மாகாணத்திலேயே லஞ்சப் பேயாட்டம்!

தியாகத்திற்கு விலை பெற்ற தேசபக்த 'ஷைலக்கு'களின் 'தில்லுமல்லு'கள்'!

இரத்த ருசி கண்ட பின்னும் கௌவிய 'தசை'யை விடுவாரோ!

பீகார் பரிதாபம் பற்றி 'ஹ்யூமனிஸ்ட்'டில் கடிதம்

'ராடிகல் ஹ்யூமனிஸ்ட்' நவம்பர் 13-ந் தேதிய இதழில் பீகாரிலிருந்து ஒருவர் எழுதியிருக்கும் முடங்கலின் விவரம் வருமாறு:

பீகார் காங்கிரஸின் பல மிக்கத்தானென்று வெளி மாகாணங்களில் கருதப்படுகிறது; அது என்றென்றும் தேசீய கட்சிக்கே வாக்களித்து வந்திருக்கிறது. இனியும் அப்படியே செய்யும் எனினும், மாகாண காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குள்ளிருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர். அடுத்த தேர்தலில் என்ன நடக்குமோ வென்று அஞ்ச வேண்டிய நிலையில் அவர்களிருக்கின்றனர். மகாத்மாவின் ஒரு சில உண்மையான தூதுவர்களுள் ஒருவரான ராஜேந்திர பிரசாத்தின் தாயகத்தில் லஞ்ச ஊழல் குடி புகுந்துவிட்டது. இது புதிதல்ல. லஞ்ச ஊழல் அங்கு என்றுமே நிலைபெற்றிருப்பதுதான். சமீப காலமுதல் கொண்டு தியாகத்துக்கான (தேசாபிமான) விலையின் போட்டாப்போட்டியிருந்து வருகிறது. தேசாபிமான ஷைலக்குகளுக்கு அவர்களுக்குரிய பவுண்டு சதையைக் கொடுப்பதா, அடுத்த தேர்தலில் மிக மிகத் தீவிரமான மாறுதல்களுக்குள்ளாவதா வென்பதுபற்றி காங்கிரஸ் யோசித்து முடிவு கட்டவேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

சுயராஜ்யம் பிரகடனமான நாள் முதற்கொண்டு, கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களுக்கான லைசென்ஸ்களும் பர்மிட்களும் தியாகத்தின் விலையாகப் பெருவாரியாக வழங்கப்பட்டன. ஆனால் 'மூமு சுதந்திரம்' எல்லாத் தடைகளையும் எடுத்தெறிந்துவிட்டது; ஆனால் பொது மக்களிடையே புகார்ப் புயல் வளர்ந்தது. வெள்ளை எண்ணைக் கதராடைக்குப் பின்னர் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை மறைத்துப் போட எதுவும் ஏற்பாடு செய்யாவிடினும், வெளியில் வந்து உலவுவதற்காவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் வந்துற்றது.

ஒழுக்க ஈனமான இந்த லஞ்ச ஊழல் நடவடிக்கைகளில காங்கிரசார் ஈடுபடக்கூடாதென்றும், அப்படி இதுவரை ஈடுபட்ட பாபிகளனைவரும் அக்டோபர் 2-ந் தேதிக்குள் தங்கள் லைசென்ஸ்களையும் பர்மிட்களையும் கொண்டு வந்து ஒப்படைத்து விட்டு, பாபமன்னிப்புப் பெறவேண்டுமென்றும் மாகாண காங்கிரஸ் கமிட்டி தீர்மானமொன்று நிறைவேற்றியது. அக்டோபர் 2 தாண்டி [illegible] னாயிற்று. [illegible]

பெருவாரி காங்கிரஸ்காரர்கள் இன்னும் அவ்விலக்கப்பட்ட பழத்தைச் சுவைத்தே வருகின்றனர். மாகாணத் தலைமை இன்னது செய்வதென்று தெரியாத 'சமூத்தி' நிலையிலுள்ளது. நியாயமான அடுத்த கட்டம் எதுவாயிருக்க வேண்டும்? தர்மா கட்சியின் புனிதமான தூலஸ்தானத்திலிருந்து அத்தகைய பாபிகளை விரட்டவேண்டும். ஆனால் இதைச் செய்யும் துணிவு மாகாணத் தலைவர்களுக்கு இல்லை.

இத்தகைய பாபிகளின் எண்ணிக்கை கணக்கற்றதாகும். செல்வாக்குள்ள காங்கிரஸ் பிரமுகர்களெல்லாம் இப்பட்டியலில் உள்ளனர். அவர்களை விரட்ட முடியும். ஆனால், விரட்டிவிட்டால் அவர்கள் எதிர்க்கட்சியில் சேர்ந்துவிடுவார்களே; அந்த ஆபத்துக்கு என்ன செய்வது! பீகார் மாகாணம் அப்படியே காங்கிரஸுக்குப் பின்னால் நிற்கிறதென்ற 'குட்டை', சோஷலிஸ்டுகள் தங்கள் பண, படை பலத்தால் உடைத்துவிடுவார்களே!

இப்பிரச்னை தன்னெதிர் நிற்க, மாகாண காங்கிரஸ் ஸ்தாபனம் கேவலமான நெருக்கடி நிலையிலுள்ளது: அந்தத் தேர்தலில் வீழ்ச்சி யேற்பட்டுவிடக்கூடாதென்று அதாவது ஊழல்களைப் பொறுத்துக்கொள்ளலாமென்று பழந் தலைவர்கள் கருதுகிறார்கள், இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்தியே தீரவேண்டுமென்பது பெருவாரியினரின் கருத்தாக இருந்து வருகிறது. மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தைத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவந்தாக வேண்டும்; மன்னிப்புக் கோர மறுக்கும் பாபிகளை விரட்டியே ஆக வேண்டுமென்பது பெருவாரியினரின் கருத்தாயிருந்து வருகிறது. மக்கள் ஏசவும் பேசவும் முனைந்துவிட்ட காரணத்தால் காங்கிரஸின் மதிப்பு பெரிதும் குறைந்துவிட்டதென்ற மறுக்கமுடியா உண்மையைக் குறிப்பிட்டு, இப்பாபாத்மாக்களைத் தொலைத்துத் தலைமுழுகிவிட்டால், ஒழுக்க முறை ஓரளவு வளர்ந்துவிடுமென்பதோடு, அடுத்துவரும் தேர்தல்களில் நஷ்டமாய்ப்போகும் ஸ்தானங்களையும் பெரும்பாலும் சரிகட்டிக்கொள்ள வாய்ப்பேற்படுமென்று அவர்கள் கூறுகிறார்கள். நஷ்டம் பெரிதும் இருக்கலாம் எனினும் காங்கிரஸ் மேற் கொள் [illegible] ஒழுக்கமு [illegible]

[illegible] தண்டித்துவிட்டால், மக்களின் ஆதரவு காங்கிரஸுக்குக் கிடைத்துவிடும். இத்தியாதி எடுத்துக்காட்டுகளால் ஒழுங்கு நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று வாதாடுவோரின் கோட்பாடு வெற்றி பெற்றுவிட்டது. தனது முந்திய தீர்மானத்தை உதாசீனப்படுத்தியமைக்காக 'ஏன் உங்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது' என்று மாகாண காங்கிரஸ் வழுக்கி விழுந்த தியாகிகளைக் கேட்டிருக்கிறது. இவ்விதம் 'மெல்ல, விழுங்க' முடியா நிலைமை யேற்பட்டுள்ளது. இரத்த ருசியறிந்தோர் பவுண்டு சதைக்கான தங்களது உரிமையைக் கைவிடுவாரென்பது ஐயப்பாடே. பயங்கரத்தக்க இந்த லஞ்ச ஊழல் தொழில்களில் பிரபல காங்கிரஸ் தலைவர்களும் இல்லாமலில்லையாகையால், பழைய தீர்மானம் மீண்டும் வலியுறுத்தப்பெறுமா வென்பதும் சந்தேகமே. வெளியேற்றப்படும் காங்கிரஸார் வேறு கட்சியில் சேர்ந்துவிடுவதால் நேரிடும் ஆபத்து மகத்தானதல்லவா! மாகாணத் தலைவர்கள் ஒவ்வொருவருடைய 'குட்டை'யும் அவர்களால் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்த முடியுமல்லவா?

விஷயம் இப்படி முற்றிப் போன—முக்கியமான தொன்றாகப்போய்விடவே ராஞ்சியில் அக்டோபர் இறுதியில் நடைபெற்ற காங்கிரஸ் தொண்டர் முகாமின்போது இதனை ரகசியமாக ஆலோசிக்க வேண்டியதாயிற்று. இந்த ரகசியக் கூட்டத்தில் என்ன நடந்ததென்று முழுதும் தெரியவில்லை. தகராறு மட்டும் இருந்ததாக அறியப்படுகிறது. மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தன்னுடையவும் தன்னுடைய காரியக் கமிட்டியினுடையவும் ராஜிநாமாவைச் சமர்ப்பித்திருக்கிறார் தலைவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றும், அதிகப்படியான உறுப்பினர்களடங்கிய காரியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டதென்றும் தெரிகிறது அதிருப்திகொண்ட குழுவினரின் பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். விவாக்கப்பட்ட காரியக் கமிட்டியில் காங்கிரஸார் தங்கள் வசமுள்ள பர்மிட்களையும் லைசென்ஸ்களையும் ஒப்படைத்துவிட வேண்டுமென்ற பழைய தீர்மானம்பற்றி 'வழ வழா' முடிவொன்று எடுக்கப்பட்டது. கொள்ளை லாபமடிக்கும் தேசபக்தர்களைக் கட்டுப்படுத்தும் வலிமை தனக்கில்லையென்பதை யேற்றுக் கொள்ளும் தன்மையில் "சர்க்காரோடு ஒத்துழைத்து கள்ள மார்க்கெட்டையும், லஞ்ச ஊழலையும் தவிர்க்கலாமென நம்பிக்கைத் தெரிவித்து மட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஏற்கனவே கொடுத்திருக்கும் லைசென்ஸ்களையும் பர்மிட்டுகளையும் சர்க்கார் சட்ட முறைப்படி மரியாதையுடன் நடத்தியேயாகவேண்டும். ஆகவே, புகார்—அதிருப்திக் கனல் [illegible] பரவவேப் [illegible]

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

புதுக்குடி

(3-வது மைல்) புதுக்குடி, நவ. 7-

6-11-49 ஞாயிறு காலை 9-மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி விண்ணிலே உயர்த்திவிடப்பட்டது. அன்று மாலை 6-மணிக்குக் கழகக் கட்டிடத்தின் முன்பிருந்து "திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்க" என்ற பேரொலியுடன் பிரம்மாண்டமான ஊர்வலத்துடன் கூட்ட மைதானத்தை அடைந்தனர்.

கூட்ட நிகழ்ச்சிக்குத் தோழர் பி. எஸ். பி. கே. ஜெயராஜ் பாண்டியன் தலைமை தாங்க, "மணியோசை" ஆசிரியர் பி. எஸ். ஜி. நெல்சன், தற்கால அரசியல் நிலையும், திராவிட முன்னேற்றக் கழகத் திட்டங்களையும் விளக்கி விரிவுரையாற்றினர்கள். அடுத்து கிராம முன்னேற்றம், மக்கள் கடமை என்பது பற்றி தோழர்கள் எஸ். ஏ. அழகையா, வி. குருசாமி, வை. ஆறுமுத்து, சுப்பையா, திரவியம் முதலியோர் அரிய அறிவுரை ஆற்றினர்கள். இறுதியில தலைவர், இனம் ஒழிப்பின் அவசாங்கம் அக்கறையில்லா திருப்பதைக் கண்டித்துப் பேசினர். தோழர் எஸ். ஏ. அழகையா நன்றிகூறக் கூட்டம் கரகோஷத்துடனும் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற ஒலியுடன் கலைந்தது. (செ-ர)

தேனி

தேனி, நவ. 10—

9—11—49 மாலை 6 மணிக்கு ஊர்வலத்திற்குப் பின்னர் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம், தோழர் பழனிச்சாமி முன் மொழிய, தோழர் தேவராசன் வழி மொழிய, தோழர் மதுரை. எம். சுப்பிரமணியம் தலைமையில் நடந்தேறியது நாட்டுப்பண் தோழர் பால் அரசு பாடினர். தலைவர் முகவுரையில் திராவிட முன்னேற்றக்கழகக் கொள்கை பற்றி விளக்கிப் பேசினர்.

கே. வி. கே. சாமி

அடுத்து, தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி திராவிட முன்னேற்றக் கழகத்தார் இனி செய்யவேண்டிய கடமைகளையும், தற்கால அரசியலார் கடமைகளைப்பற்றியும் விரிவாகவும், அழகாகவும் பேசினர். கூட்டத்தில் மாற்றுக்கட்சி தோழர்களால் கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கு கே. வி. கே. சாமி பதில் அளித்தார். தேனி திராவிட முன்னேற்ற மாணவர் கழகம், கொடைக்கானல் திராவிட முன்னேற்றக் கழகங்களின் சார்பாகவும் கே. வி கே சாமி அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அடுத்து கொடைக்கானல் தோழர் அப்துல் காதர் (தி. மு. க. செயலாளர்) முஸ்லீம்கள் ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திருக்கின்றனர் என்பதுபற்றி விரிவாகப் பேசினர்.

கூட்டத்திற்கு தேனியைச் சுற்றிலும் உள்ள கிராம மக்களும், மாணவர்களும் வந்திருந்[தனர்] [illegible] திருமலாபுரம், சின்னமனூர், அமச்சபுரம், வடுகப்பட்டி, உத்தமபாளையம், ஆசாரிபட்டி, பெரியகுளம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலிருந்தும் இயக்கத் தோழர் வந்திருந்தனர். தலைவர் நன்றிகூற 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற பேரொலியோடு கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

பேராவூரணி

பேராவூரணி, நவ. 10—

7-11-49ல் பேராவூரணி திராவிடமுன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில் தோழர் கருப்பையா திராவிட பண்பாடு, கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதுபோது தோழர்கள் என். வி. நடராசன் அவர்களும் தோழர் இரா. இளவரி அவர்களும் தலைவர் முன்னுரைக்குப்பின் பெரியாரின் பொருந்தாமணத்தின் விளைவே திராவிட முன்னேற்றக் கழகம் என்றும், தி. மு. கழகத்தின் முக்கிய நோக்கம், இளைஞர்களின் கடமை முதலியவை பற்றியும் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் கூறி, பெருந்திரளான மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தனர் (வி-உ)

இந்தோனேஷியாவுக்கு திரும்பினர்

ஹேக்கில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாட்டில் பங்கு கொண்டபின் 14-ம் தேதியன்று இந்தோனேஷிய முதலமைச்சர் தோழர் ஹாட்டா பட்டேவியாவுக்குத் திரும்பினர். கெமயூரான் விமான நிலையத்தில் அவரை ஆயிரக்கணக்கான மக்கள் கூடி வரவேற்றனர். அதுபோது தோழர் ஹாட்டா அவர்கள் "வட்டமேஜை மகாநாட்டின் முடிவுகளை இந்தோனேஷிய குடியரசு நாடுகள் ஏற்றுக் கொள்ளும்" என்று தெரிவித்தாராம்.

தோழர் ஹாட்டாவுக்கு மக்கள் அளித்திருக்கும் வரவேற்பையும் ஹேக் மகாநாட்டைப் பற்றி அவர் தெரிவித்திருக்கும் கருத்தையும் நோக்குமிடத்து விரைவில் இந்தோனேஷியாவில் மக்களாட்சி மலரும் என்று நம்ப இடமேற்படுகிறது. ஆனால் புதிதாக அமைக்கப்படும் அரசியலில் டச்சு ஏகாதிபத்திய வாதிகளுக்கும் இடமளிக்கப்படுமா என்பது இனி கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அறிகுறிகள் 'மங்கல்'தாம்!

அமெரிக்காவிடம் அரபு நாடுகள் முறையீடு!

பாலஸ்தீனில் அமைதிக்கான அறிகுறிகள் இன்னும் மங்கலாகவே இருப்பதாக அரபு நாடுகள் எழினுடையவும் பிரதிநிதிகள் அமெரிக்க வெளிநாட்டு இலாகாவிடம் அறிவித்தனர். இஸ்ரேல் பாலஸ்தீனுக்கான ஐ. நா. சமரசக் கமிஷனிடமும் ஒத்துழைக்க மறுத்து வருகிறதென்று அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனராம்.

குறைந்த உழைப்பும் நிறைந்த இன்பமுமே மனித வாழ்க்கையின் குறிக்கோள்

உலகம் புதுமையை வரவேற்கிறது

பழையன கழிந்து புதியன புகுதல் வேண்டும்

—————(0)—————

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவு

8-11-49 மாலை 3-30 மணிக்கு எழும்பூர் அரசியலார் நடுநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தமிழ்க் கழகத்தின் சார்பில் தோழர் கே. கணபதி அவர்கள் தலைமையில், நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

தலைவர் தம் முகவுரையில் தோழர் நெடுஞ்செழியன் அவர்களைக் கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி, பின்னுரையில் அவரது கருத்துக்களை ஆதரித்துப் பேசினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தம் 1-15 மணி நேர சொற்பொழிவில் 'பழமையும், புதுமையும்'' என்னும் பொருள் பற்றி ஆற்றியதன் சுருக்கம் வருமாறு:—

இப்பள்ளியின் தமிழ்க் கழகத்தின் சார்பாக என்னைச் சொற்பொழிவு ஆற்ற அழைத்தமைக்கு என் உளமார்ந்த நன்றி! மகிழ்ச்சிகொள்கின்றேன்! சாதாரணமாகப் பாமர மக்களுடன் தொடர்பு கொள்ளும் நான், உங்களிடையே தொடர்புகொள்ளும் வாய்ப்புபெற்றதற்கு மிகமகிழ்கிறேன். மற்றப் பள்ளிகளைவிட இத்தகைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு வருவதில் தனி விருப்பம் ஏற்படுகிறது. ஏனெனில், இப்பள்ளியில் பயிலும் தோழர்கள்தான் வருங்காலத்தை நல்லதொரு உலகமாக்கும் குழந்தைகளின் ஆசிரியராக அமைகிறார்கள். எதிர்காலத்தில் நீங்கள்தான் சிந்தனைச் சிற்பிகளை உண்டுபண்ணுகிறீர்கள். உங்களிடம் சிந்தனைக்கு இடம் உண்டு. சாதிப்பது ஏராளம். ஆகையால்தான் உங்களிடம் நான் சொற்பொழிவாற்றுவதற்கென்று கொண்டது 'பழமையும் புதுமையும்'' என்ற இலக்கியம் பற்றியதாகும்.

உலகம் புதுமையை வரவேற்கிறது

பழமையும் புதுமையும்! இரண்டாகப் பிரிகின்றன. வடக்கு-தெற்கு, அகம்-புறம், என இரண்டாகப்பிரிக்கின்றன திசைகள், இடங்கள். அதுபோல் காலத்தையும் அத்துடன் தோய்ந்த கருத்தையும் இரண்டாகப் பிரிக்கிறோம். சென்றது பழமை-வருவது புதுமை புதுமையைக்காணும் போது பழமையைக் காண்கின்றோம்; புதுமை வளர்கின்றது. பழமை செல்கின்றது. ஆகவே காலத்தினால் பாகுபடுத்திப் பழமைப் புதுமை இலக்கியங்களில் எவ்வாறு தோய்ந்துள்ளன என்பது பற்றி இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். காலத்தை கணக்கிடும்போதுவருங்காலத்தில்வருவனவற்றை கணக்கிடுகின்றோம். பழமையும் புதுமையும் சிலசமயம் ஒன்று சேர்கின்றன; சிலசமயம் போராடுகின்றன. ஆகையால் வாழ்க்கையில் இரண்டையும் ஆராய்ந்து பார்த்து அழிக்கும்பழமையிலிருந்து வாழவைக்கும் புதுமையைப் பிரித்து ஏற்றுக்கொண்டு செப்பனிட்டுச் செல்கின்றோம். உடமைகளைப் பொறுத்துப் பார்த்தாலும் பழமையைத் தள்ளிப் புதுமையைக் கொள்கின்றோம். கருத்து மக்கள் உள்ளத்தில் அந்தந்த காலத்திற்குத் தகுந்தாற்போல் ஏற்படுகின்றன புதுமையை வரவேற்கச் செய்கிறது இன்றைய உலகம். புதுமை அழகு வாய்ந்தது. வாழ்விற்கு ஏற்றது

காலத்திற்கேற்ற கருத்து தேவை

கருத்தை—கால வரையைப் பார்த்து, இருக்கும் நிலைக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ள வேண்டும். வள்ளுவர் 2000 ஆண்டுகட்குமுன்பு கூறியுள்ள கருத்து இப்பொழுதும் பொருந்தும்போது, அது புதுமையாகவே கொள்ளப்படுகிறது. மனிதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிகமுற்ற நல்ல நிலைக்கு இன்றுவளர்ந்து வந்துள்ளான். காட்டுமிராண்டி காலம்-கருத்தற்ற காலம்-உள்ளத்தில் சீரிய எண்ணம் எழாத காலம்! உலகியலை அவன் அறியத் தொடங்கிய பிறகு, அறிவு பெற ஆரம்பித்தான். உழைப்பைக் குறைப்பதெப்படி? பெருகின்ற பலனை எப்படி அதிகமாக்குதல் — இன்பம் காணுதல் எங்ஙனம்? என்று ஆராய்ச்சிக்குள்ளாக்கப்பட்டது. எதிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது என ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அறிந்து கொள்ளும் முயற்சி வளர வளர, அவனுடைய அறிவும் வளர்வதாயிற்று. அறிவைத் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும்போது அது கருத்தாக மாறுகிறது. அப்பொழுது ஆராய்ச்சி செய்கின்றான்-தன் சுற்றுப்புறத்தைப் காணுகின்றான். இயற்கையை அறிகிறான், அதை எப்படி வாழ்க்கையில் பயன்படுத்துவது என சிந்திக்கின்றான். பயனை அடைகிறான்.

மனித வாழ்க்கையின் குறிக்கோள்

இப்படிபலப்பலஆராய்ச்சிகளால், சிந்தனையின் விளைவால் ஏற்படுவதை அறிந்துகொள்கிறான்; பதியவைக்கிறான், ஆராய்கிறான், கண்டு பிடிக்கிறான், பயன்படுத்துகிறான். இந்த முறையிலே பல வேறு கருத்துக்களைக் கொண்டு ஓரிடத்திலிருந்து நடந்து மற்றோரிடத்திற்குச் சென்று கொண்டிருந்த மனிதன், படிப்படியாக பலவித சாதனங்களைக் கண்டு பிடித்து, இன்று மணி ஒன்றுக்கு 730 மைல் விரைவில செல்லக்கூடிய வானவூர்தியில செல்லுகின்றான். அதுபோலவே குடியிருப்புமனை-உணவு—உடையிலும் மாறுதலடைந்திருக்கின்றான். காட்டுமிராண்டி காலத்தில், மனிதன் காட்டில் குகை[illegible]லும், மரப்பொந்துகளிலும், புலிகள் பதுங்கியிருந்த புதர்களிலும் வாழ்ந்து வந்தவன், இன்று மாட மாளிகை, கூட கோபுரங்களில் வாழ்கின்றான்-வாழக்கற்றுக் கொண்டான், கற்றுக் கொண்டிருக்கின்றான். பச்சை மாமிசத்தைப்புசித்து வந்தவன், இன்று பக்குவப் படுத்தி, சத்தெடுத்து உண்ணும் நிலைக்கு வந்துள்ளான் இலை,தழைகளை இடையில் சுத்தித்திரிந்து கொண்டிருந்தவன் இன்று,பட்டு, கம்பளங்களால் தன்னை அலங்கரித்துக்கொள்கின்றான். இத்தகைய வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்கள், மனிதன் தன் உழைப்பைக்குறைத்துக்கொள்ளவும், பயனைப் பெருக்கிக் கொள்ளவும், இன்பத்தை வளர்த்துக் கொள்ளவும்எண்ணுகின்றான். குறைந்த உழைப்பு, மிக்க பயன், நிறைந்த இன்பம் இவையே மனித வாழ்க்கையின் குறிக்கோள்களாக விளங்குகின்றன.

இன்னும் புதுவாழ்வு கிட்டவில்லை

கருத்துக்கள் வளர்கின்றன. இந்தவிதக் கருத்துக்களைத்தான் இலக்கியம் கொடுக்கிறது—வளர்க்கிறது. மனிதன் தன் முயற்சியால் காலத்திற்குத் தகுந்தாற்போல் கருத்தைக் கொள்கின்றான். ஆகையால், தேவையற்ற வீண் முயற்சி, குருட்டுப் பழக்கம் இவைகள் காலத்தையும், அறிவையும், பொருளையும் பாழ்படுத்துகின்றன. மனித வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்துதரும் அளவுக்கு அறிவு படிப்படியாகவளர்ந்துள்ளது. அது இனியும் வளர்ந்துவரும். அறிவு வளர வளர, கருத்துக்களும் வளர்ந்து வந்துள்ளன அறிவோடொத்த கருத்து வளர்ந்த அளவுக்கு, மக்களுடைய உள்ளமும் வளர வேண்டும். அப்படி வளர்ந்திருக்கிறதா என்றால், இல்லையே. அறிவு வளர்ந்த பாதையில் இன்னும் சிலர் கி. பி. 10, சிலர் கி. பி. 5, சிலர் கி.பி. 12, சிலர் கி. மு. 12. ஆகிய நூற்றுண்டுகளிலேயே தங்கியிருக்கிறார்கள். கி. பி. 20ஆம் நூற்றுண்டில் வாழத் தகுந்தவர்களாக எல்லோரும் ஒருசேரக் காணப்படவில்லை.

ஆகவே, ஒரு கருத்து தோன்றி, அதைவிட சீரிய கருத்துஒன்றுதோன்றுதவரையிலமுனபுதோன்றியது புதிது ஆகும். புதுமையாகக் கருதப்படும். அல்லது ஒன்று சீரியக் கருத்தாகப் பின்னால் தோன்றினால் அது புதுமையாகவும், முன்பு தோன்றியது பழமையாகவும் கருதப்படும். சீரிய கருத்து தோன்றியும் ப[illegible] மனித[illegible] சொல்லோ, செயலோ செல்லுமாயின், அவன் கீழ்நோக்கி செல்கின்றான் பழமையிலேயே உழல்கின்றான் என்று கொள்ளவேண்டும். முன்பு சீரிய கருத்து தோன்றி பின்பு தோன்றியது சீர்மை குன்றியதாக இருந்தால்-பின்னையதை பழமையாகவும் முன்னையதைப் புதுமையாகவும் கொள்ள வேண்டும். அப்படியே நமது தமிழ் இலக்கியங்களை வரிசை படுத்தி அதன் அட்டவணையைப் பார்த்தல் வேண்டும். தொல்காப்பியம்-இப்பொழுது உலகத்தின் காலம்-இந்த இரண்டுக்கும் இடையில் கருத்து வளர்ந்த வரலாற்றைப் பார்த்தல் வேண்டும். அதுபடியே தமிழ் இலக்கியங்களிலே தொன்மை வாய்ந்ததும் இருப்பவைகளிலேயே முதன்மை வாய்ந்ததும் தொல்காப்பியமே தொல்காப்பியம் இரண்டாயிரத்தைந்நூறு அல்லது 3000 ஆண்டுகட்கு முன்னர் எழுந்துள்ளதாகக் கருதுகின்றனர். ஆராய்ச்சியாளர்கள் அத்தனை தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தையும், அதனை அடுத்த திருக்குறளையும், சங்க கால இலக்கியங்களான ஐங்குறுநூற்றையும், பதிற்றுப்பத்தையும், பரிபாடலையும் அகநானூற்றையும், புறநானூற்றையும், பத்துப்பாட்டையும, கலித்தொகையையும், நற்றிணையையும், குறுந்தொகையையும் கி. பி. 2-ம நூற்றுண்டில் எழுந்த சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும், மறைமலையடிகளார் ஆராய்ச்சிப்படி கி. பி. 3-ம் நூ. ஆண்டில் எழுந்த திருவாசகத்தையும்,4-ம் நூ ஆண் எழுந்த ஆசாரக்கோவை, 5-ம் நூ. ஆண்டில் பெருங்கதையையும், 6-ம் நூ. ஆண்டில் எழுந்த கல்லாடத்தையும், 7-8ம் நூ ஆண்டுகளிலெழுந்த அப்பர், சம்பந்தர் தேவாரங்களையும், 9-ம்நூ. ஆண்டிலெழுந்த சுந்தரர் தேவாரத்தையும், ஆழ்வார்கள் பிரபந்தங்களையும் 10-ம் நூ. ஆண்டில் எழுந்த சீவக சிந்தாமணியையும், 11-ம் நூ ஆண்டில் எழுந்த பெரிய புராணத்தையும், 12-ம் நூ. ஆண்டின் முற் குதியில எழுந்த கந்த புராணத்தையும், பிற்பகுதியில் எழுந்த கம்ப இராமாயணத்தையும், 13-ம நூ. ஆண்டில் எழுந்த சிவஞான போதத்தையும, 14-ம நூ.ஆ தோன்றியதலபுராணங்களையும், 15-ம நூ. ஆண்டில் வில்லிபாரதத்தையும், 16-ம நூ. ஆ. தோன்றிய திருவிளையாடற் புராணத்தையும், 17ம நூ. ஆ. எழுந்த சீரா புராணத்தையும், தேம்பாவணியையும், 18-ம் நூ [illegible] தாய[illegible] 19-ம் நூ. ஆண்டில் எழுந்த இராமலிங்கர் பாடல்களையும், 20-ம் நூ. ஆண்டின் துவக்கத்தில் தோன்றிய பாரதியாரின் பாடல்களையும், இப்பொழுது வீறுபெற்றுத் திகழும் புரட்சிக் கவிஞர் (கூட்டத்தில் பலத்த கைத்தட்டல) பாரதிதாசன் பாடல்களையும வரிசையாக வைத்து ஆய்ந்து பார்ப்பீர்களானால், தமிழகம் வளர்ந்தவந்த நிலை தெள்ளியதாக விளங்கும். தொல்காப்பியம் முதல் கருத்துக்கள் எப்படி வளர்ந்திருக்கின்றன என அறியவும். கி. பி. முதல், 2 நூ. ஆண்டுகள்வரையில் தமிழகம் ஒவ்வொரு துறையிலும் மேலோங்கி வளர்ந்து வந்த விதத்தையும், அறிவுத் துறையிலேயே அந்த அளவோடு ஒரு தேக்க நிலை ஏற்பட்டதையும், அதற்குப் பின்னால் நிலை குலைந்த தன்மை நீடிக்கத் தொடங்கியதையும் காணலாம். எத்தகைய சீரிய கருத்துக்கள் தொல்காப்பிய காலத்தில் ஏற்பட்டன; எந்தக் கருத்துக்கள் வளர்ந்தன, அவை எப்படி வைதிகப் பழமையால் அழிக்கப்பட்டன;என்பதையும்அறியலாம்.

புதுமையைப் போற்றுமின்!

படித்த மக்களிலும் சிலர் வைதிகப் பழமையையும் காப்பாற்றித் தீர வேண்டும் என்று கூறுகிறார்கள். காரணம் கேட்டால் கூற முடியாது என சொல்லுகிறார்கள். பயன்படாத பழமையைக் காப்பாற்ற முனைகிறார்கள். பழமையால் ஒன்றும் பயன் ஏற்படாது-புதுமையால் வாழ்க்கை இனிது நடைபெறும். மனிதனது அறிவு தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. பழமைக் கருத்துக்கள் 1949 ஆண்டிற்குத் தேவையுமில்லை. உங்களது வாழ்க்கை,காலம், உழைப்பை பழமைக்குச் செலவிடாதீர்கள். வேண்டாத பழமையைத் தள்ளுங்கள்-புதுமையைக் கண்டுபிடியுங்கள், ஏற்றுக்கொள்ளுங்கள், வாழ்க்கைக்குப் பயன்படுத்துங்கள்!

பழமையும் அதன் விளைவுகளும்

புறநானூற்றில் 400பாட்டுக்களைக்கொண்டது அந்தக் காலத்தின் அரசு. நாட்டின் வளமை, புலவர்களின் பண்பு. புலவர்கள், ஆட்சிக்கு அறிவுறுத்திய சீரிய கருத்துக்கள், தேவையான கருத்து அதில் உள்ளது. திருக்குறள் உலகம் போற்றும் ஓர் உன்னத நூல், இவ்வுலக வாழ்வு உண்டு எனக்கூறுகிறது. காதலில் ஐவகை ஒழுக்க நிலையுண்டு எனக்கூறுகிறது, காதலை மறுத்து காவியுடை அணியச் சொல்லவில்லை! மொழிவளர-கடலில் செல்ல-கம்பளங்கள் எலி மயிரிலும் செய்யப்பட்டுள்ளதை கூறுகிறது.விளக்கு ஏற்படாத காலத்திலும், சக்கிமுக்கிக்கல் தேவையில்லை என்று விளக்கெண்ணை ஊற்றி திரிபோட்டு விளக்கு எரித்ததாகக் கூறுகிறது. உலோகத்தால் (Metal) ஆயுதங்கள் செய்ததாகக் கூறுகிறது. ஆட்சி இப்படி இருந்தால் மக்கள் சுபீட்சமாக வாழமுடியும் [illegible]கூறுகிறது,என்றகாலம்

சர்க்கார் நடத்துவது 'சென்னைச் செய்தியா', 'மந்திரிகள் செய்தியா'?

சிக்கனத் திட்டத்தின் கீழ் நிறுத்திவிட்டாலென்ன?

விளம்பர ஏட்டுக்கு வீண் விரயம் பற்றிக் கேள்விகள்

சென்னை, நவ. 16—

'சென்னைச் செய்தி' (மதராஸ் இன்பரமேஷன்) பத்திரிகையை நிறுத்தும் நோக்கம் சர்க்காருக்கு இல்லையென தோழர் எம். பக்தவத்சலம் நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

இது பற்றிய கேள்வியை தோழியர் பேகம் அமிருதீன் கேட்டார்.

"சிக்கனத்தின் அவசியத்தை முன்னிட்டு, 'சென்னைச்செய்தி' இதழை நிறுத்தி விட சென்னை சர்க்கார் ஏற்பாடுசெய்யாதது ஏன்? மந்திரிகளின் புகைப்படங்கள், அவர்களின் வானொலிப் பேச்சுகள் இவை தவிர, தினசரிப் பத்திரிகைகளில் வந்தவைதானே 'சென்னைச் செய்தி'யிலும் வருகின்றன?

மந்திரி: சட்டசபை "உறுப்பினர்களுக்கு வேண்டிய செய்திகள் அப்பத்திரிகையில் இல்லாமல் போகலாம்; கிராமவாசிகளுக்கு வேண்டியவை அதில் அநேகமுள்ளன."

தோழர் பி. எஸ். மூர்த்திகேட்ட கேள்விக்குப் பதில் கூறுகையில், சென்னை செய்தி ஆங்கிலப்பதிப்பு 3,900-ம் தமிழ்ப் பதிப்பு 1 500-ம் தெலுங்குப் பதிப்பு 3,900-ம் கன்னடம் பதிப்பு 2 250-ம் மலையாளப் பதிப்பு 2 800-ம் அச்சடித்துவெளியிடப்பெறுகின்றனவென்று குறிப்பிட்டார்.

இலவசமாய் எத்தனைப் பிரதிகள் தரப்படுகின்றனவென்று கேட்டதற்கு, அது அவ்வளவு அதிகமல்லவென்று மந்திரி குறிப்பிட்டார்.

'சென்னைச் செய்திக்கு சர்க்கார் செலவிடும் பணம், பொதுபணத்தைக் கரியாக்குவதேயாகுமென்பதை மந்திரி தெரிவாராவென்று தோழர் பி. போக்கர் கேட்டதற்கு, 'அது உறுப்பினரின் கருத்தாயிருக்கலாம். என மந்திரி குறிப்பிட்டார்.

பேகம்அமிருதீனின் இன்னொரு கேள்விக்குப் பதிலளித்த மந்திரி, மத்திய சர்க்கார் தாங்கள் நடத்திவந்த இதுபோன்ற பத்திரிகையை நிறுத்திவிட்டார்களென்பது உண்மைதானென்றும், ஆனால் அவர்களுக்கு வேறு முறைகளில் விளம்பர சாதனங்களிருக்கின்றனவென்றும் அவற்றிற்கு அவர்கள் அதிகபணம் செலவழித்தே வருகின்றனரென்றும் குறிப்பிட்டார்.

ராஸாக்கான்: சென்னைச் செய்திகள் இதழில் வெளிவரும் செய்திகளைக்கொண்டு பார்த்தால், அதன் பெயரை 'மந்திரிகள் செய்தி' என்றே மாற்றி விடலாம்போலிருக்கிறதே!

மந்திரி: அது உறுப்பினரின் கருத்தாகும். இக்கேள்வியைப் போட்டு அவர் மன நிறைவு பெறலாம்.

அமீத்கான்: சட்ட சபையில் நடப்பவை சிறிதளவும் அப்பத்திரிகையில் இடம்பெறுமா?

இவ்யோசனையைக்கவனிப்பதாக மந்திரி தெரிவித்தார்.

அந்தரங்க உரையாடல்!

இந்திய முதலமைச்சர் பண்டித நேருவுடன் பிரிட்டிஷ் முதலமைச்சர் தோழர் அட்லி நடத்திய உரையாடல்களின் கருத்தை வெளியிடுமாறு பொதுமக்கள் மன்ற உறுப்பினர் கேட்டனராம். அதற்குத் தோழர் அட்லி தனக்கும் பண்டித நேருவுக்குமிடையே நடைபெற்ற உரையாடல் அந்தரங்கமானவை என்றும், அதனைவெளியிட இயலாதென்றும் பதில் சொன்னாராம்.

சந்தா

(உள் நாடு)

ஒரு மாத சந்தா	ரூ.	2—0—0
மூன்று மாத சந்தா	ரூ.	6—0—0
ஆறு மாத சந்தா	ரூ.	12—0—0
ஒரு வருட சந்தா	ரூ	24—0—0

மூன்றுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வி. பி. மூலம் அனுப்ப இயலாது

மானேஜர், 'மாலை மணி'

இனி நடப்பவை

பழைய வத்தலக்குண்டு— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழாப்பொதுக்கூட்டம், 18-11-49 வெள்ளி மாலை 6 30 மணிக்கு இவ்வூர் கூட்டுறவு பண்டகசாலைக்கு எதிரில் நடைபெறும். அதுபோது தோழர் செங்குட்டுவன் தலைமையில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி இரா துரைராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

இருகூர்— கோவையை அடுத்துள்ள இருகூரில் 18-11-49 மாலை 6-30 மணிக்கு "மறுமலர்ச்சி நாடக சபா" துவக்க விழா நடைபெறும். தோழர் வை. சுப்பிரமணியம் அவைத்தலைவர் தலைமைவகிப்பார். தோழர்கள் க. கிருட்டிணசாமி கு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கண்டக்காமுத்தூர்— இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 18—11—49 அன்று வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் கொண்டாடப்படும். அது போது தோழர் ரா. பழனிசாமி தலைமையில் தோழர்கள் ச.கு. தாண்டவன், ச. ஆ. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

எட்டுகுடி—இவ்வூர் தி. மு. கழகக்கிளையின் துவக்கவிழா 19-11-49 சனிமாலை 5மணிக்குவடக்குவீதியில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கோ. இராதாமணாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருமணம்

விழுப்புரம்— தோழர் சி செல்வத்தாண்டவனார் —தோழியார் ஜானகி திருமணம் 21 11 49 திங்கள் காலை 9-15க்கு தோழர் இ. இளங்கண்ணனு பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெறும். இடம்: இலட்சுமி நிலையம், பேட்டைத்தெரு, விழுப்புரம்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

18—11—49

சென்னை-திருவல்லிக்கேணி :—	இரா. நெடுஞ்செழியன், கே ஏ. மதியழகன், டி. எஸ். வேலன், டி. என் இராமன்.
பழைய வத்தலகுண்டு :—	ஏ வி. பி. ஆசைத்தம்பி, இரா. துரைராசன்.
ஜெயங்கொண்டான் :—	சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன்.

19—11—49

திருவானைக்காவல் :—	ஈ. வெ. கி. சம்பத், சி. பி. சிற்றரசு.
எட்டுகுடி :—	டி. கே. சீனிவாசன், கோ. இராதாமணாளன்.

20—11—49

ஆம்பூர் :—	இரா. நெடுஞ்செழியன், மா. இளஞ்செழியன்.
காஞ்சிபுரம் :—	சி. என். அண்ணாத்துரை. கே. ஏ. மதியழகன்.
கரூர் :—	ஈ. வெ. கி. சம்பத், டி. கே. சீனிவாசன். ஜி பராங்குசம்.
திருவாரூர் :—	இரா. இளம்வழுதி, காஞ்சி கல்யாணசுந்தரம்.
குமாரமங்கலம் :—	சி. பி. சிற்றரசு, ஜி. என். இராஜு.
புதுக்கோட்டை :—	ஏ. வி பி. ஆசைத்தம்பி, என். எஸ் இளங்கோ.

திருவண்ணாமலையில்

அகில இந்தியக் கைத்தொழில் விவசாய சுதேசி பொருட்காட்சி

25-11-49 முதல் 6-12-49 வரை நடைபெறும்.

29--11--49 மாலை 6-30 க்கு திருச்சூர் பிரேமாவதி - நடனம்

30--11--49 மாலை 6-30 க்கு இசையரசு M.M. தண்டபாணி தேசிகர்-பாட்டு

1--12--49 மாலை 6-30 க்கு லலிதா—பத்மினி - நடனம்

2--12--49 மாலை 6-30 க்கு

கந்தர்வகான ஏழிசை மன்னர் M. K. தியாகராச பாகவதர் - பாட்டு

3--12--49 மாலை 6-30 க்கு நகைச்சுவையரசு N. S. கிருஷ்ணன் நடத்தித்தரும்

காந்திமகான் கதை (வில்லுப் பாட்டு) கிந்தனார் (காலட்சேபம்)

கடைகட்கு முந்துங்கள்

—பொருட்காட்சி கமிட்டியார்.

தேவை

நமது "மாலை மணி"யை பொறையாறில் விற்பனைசெய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை.

மானேஜர், "மாலை மணி"

குறைந்த உழைப்பும்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்த காலம் தான், சிறப்பாக இருந்தகாலம், தேக்க நிலை ஏற்பட்டதற்குப் பின், படிப்படியாகத்தோன்றி வந்தகருத்துக்களை ஆராயும்போது மக்களின் கருத்து, எண்ணம் வேறு வகையில் திருப்பப்பட்டு விட்டன எனப்புலப்படுகிறது. வாழ்க்கையை அலட்சியப்படுத்தும்படி, எண்ணும்படி பின்னால் மதக்கருத்துக்களால் மனிதன் திருப்பப்பட்டான். உலகம் உண்டு, வாழ்வு உண்டு, இன்பம் உண்டு அதிலே, என்று கொண்டிருந்த மக்களின் உள்ளங்களிலே-இந்த உலகம் பொய், ஆனால் வேறு உலகம் ஈரேழு பதினான்கு உண்டு, வாழ்வு பொய், எல்லாமமாயை என்று மதக்கருத்துக்கள் மக்களை நம்புங்கள் என்று சொல்லத் தொடங்கின. இவ்வுலக வாழ்வை மறந்து மற்றதோர் உலகத்திற்குத் தங்களைத் தயார் செய்து கொள்பவர்களாகக் காணப்பட்டார்கள்! மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற முயற்சி நின்றது! மதம் சொல்லும் எல்லாவற்றையும் நம்பும் பழக்கம் ஏற்பட்டது! அறிவு தடைபட்டது. குருட்டு நம்பிக்கை வளர்க்கப்பட்டது! இயற்கையை அறியாது அஞ்சி வாழும் தன்மையராக மக்கள் மாறினர்! சில பல இலக்கியங்களைத் துருவிப் பார்த்தபோது கி. பி. 3-நூ. ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட இலக்கியங்கள் மதக்கருத்துக்களைப் பரப்ப ஏற்பட்டதாக அறிய முடியும். இடைக் காலத்தில் தோன்றியவைகள் அத்தனையும் மதக் கருத்துக்களையே பரப்பியிருக்கின்றன.

அந்தக் காலமும் இந்தக் காலமும்

இடி, மின்னல் ஆகியவைகளுக்குப் பயம். வேறுலகத்திற்குப் போக ஆசை. ஆக ஆசைக்கும் பயத்திற்கும் மனிதன் அடிமைப்பட்டான். அச்சம், ஆசை இவைகளைக் கடவுள் உண்டாக்கினார் என்ற அறிவு ஏற்பட்டுள்ளது—இது ஆரம்ப காலத்தில் மனிதன் எண்ணினால் அது பாபமாகும் அந்தக்காலத்தில். அவன் சுற்றுப்புறம் அப்படி இருந்திருக்கின்றன. நிலைமை மாறி—காலமும் மாறி அறிவு வளர்ந்த கடைசி நிலையில் காட்டுமிராண்டி காலத்துக் கருத்துக்களைக் கொள்ளுவது வாழ்க்கைக்குப் பயன்படுகிறதா? இல்லையே!

மூட நம்பிக்கை!

"முயற்சி திருவினையாக்கும், முயற்சின்மை இன்மை புகுத்திவிடும்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதற்கு மாறாக ஆட்டுவித்தான், பாட்டுவித்தான், என்றும் அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் ஒப்புக்கொண்டார்கள், மடமக்கள். மூட நம்பிக்கை, குருட்டுப் பழக்கங்கள் தேவையில்லாதவை ஆகிய இவற்றிற்கு வீண்காலம் செலவிடப்படுகின்றது.

இன்பம் காண்

1949-லும் சிறு தொண்டன் பரம்பரை உள்ளானே, சிவ பக்தியினால் மகனைக் கொலைசெய்துகோயம்பத்தூர் ஜில்லா ஜட்ஜ் கொலைகுற்றத்திற்கு சிவபக்தனுக்குத்தூக்கு தண்டனை கொடுத்திருக்கிறாரே எந்த அளவிற்கு கருத்துக்கள் வளர்ந்துள்ளது என நீங்கள் சிந்திக்க வேண்டும். மூன்று ஆண்டிற்குமுன்பு, மாயவரத்தில் அரசு—வேம்பு மரங்களுக்குக் கலியாணம் அதற்கான அமைப்புப் பத்திரம் குறிப்பிட்டலக்கனத்தில்திருமணம்நடைபெறுவதாகஆகவே இன்றைய மனிதன் 20-ம் நூற்றாண்டில் வாழ்கிறான். ஆனால் கருத்து 10, 14, 15-ம் நூற்றாண்டுகளிலே உள்ளது. பயனில்லாகருத்துக்களில் உள்ளார்கள். அந்தக்காலத்தில் உலகம் தட்டை என்று கருதினான். சரி, அப்போது அவன் அலைந்து திரிந்தான் காணப்பட்டது தட்டையாகவே. இப்போது அறிவு ஆராய்ச்சிப்படி உலகம்உருண்டைஎனக் கருதுகிறோம். இல்லை உலகம் தட்டை என்றால், இப்போதும் என்ன என்று கருதுவது அவர்களை? ஒரே உலகம் உள்ளது என்றுஅறிந்தும், ஈரேழு உலகம் உண்டு என்றால்என்ன நினைப்பது? ஆகையால் வாழ்க்கையில் புராணங்களில் உள்ள மாறுபட்ட, மூடக் கருத்துக்களை மாற்றி அறிவுக்கருத்துக் கொண்டு வருங்கால சிற்பிகளை, வீரர்களை, அறிஞர்களை ஆசிரியர்களாகிய நீங்கள்தான் உண்டு பண்ணவேண்டும். பழமைக்கு - பணியாதே, பழமைக்கு-வளையாதே, பழமைக்கு- நெளியாதே, பழமையைப்பார், சிந்தனை செய் அக்கருத்துக்களைப்பழமையில் சொல்லப்பட்டகாலத்திற்குப் பொருத்தமான கருத்துக்களை எடுத்துக்கொள். **"யாதும் ஊரே யாவரும் கேளீர்"** என்ற புற நாநூற்றின் கருத்தை எடுத்துக்கொள். வள்ளுவரின் கருத்தைப்பார். இக்காலத்துடன் சம்மந்தப்படுத்திப்பார். ஒப்பிடு, உற்றது, ஏற்றது எடுத்துக்கொள். சீரிய சிறந்த கருத்தை எடுத்துக்கொள். இன்பம் காண்

ஏழ்மை அகற்று

வறுமையை ஏழ்மையை இவைகளை காணும்போது அவைகளைப்போக்கு— ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு வேண்டாம், ஏழைக்குகொடு. ஏழையை வாழ வழி செய், வேறுலகம் இல்லை என்று சொல்லுங்கள். இந்த உலகம் உண்டு, என்று கூறுங்கள். ஆண்டவன் தன் தலையில் கையை வைக்க வந்தவர் வள்ளுவனார் ஒருவர்தான். **"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகம் இயற்றியான"** இந்த உலகத்தை உண்டாக்கியவன், பிச்சை எடுத்து வாழும்படி செய்தவன், அவன் அழிக என்று வள்ளுவர் சொல்லியுள்ளார். நாம் முயற்சி கொண்டால் காரியம்முடியும். நம்மால் ஆகும். நிறைவேற்றித் தீர வேண்டும் என்ற கருத்து நடைமுறையில் வேண்டும். முடியும். எருமபுர மடத்தில் 75000 ஏக்கர் நிலங்கள் சன்னிதானத்திடம் உள்ளன. அதனால் யாருக்குப் பயன்? இந்நாட்டு ஏழ்மைத்தொழிலாளி, விவசாயி, பாட்டாளிக்கு ஏதாகிலும் பயன்படுகின்றதா? இல்லை! மக்களுக்குச் சிறிதளவு உதவுகிறதா? கல்விக்கு எடுத்து செலவு செய்வதால் ஆண்டவன் கோபிப்பாரா? அல்லது கொடுக்கமாட்டேன் என்கிறாரா? இப்படியிருக்க ஸ்ரீரங்க கோவிலில் நெய் விளக்கு வைக்கலாமா, மின்சார விளக்கு வைக்கலாமா என்ற ஆராய்ச்சி நடைபெறுகின்றது. பாழ்படுத்தும் பழமை வந்துவிட்டது. அதை அழிக்க வேண்டும் புதுமையை வளர்க்க வேண்டும். அது ஆசிரியராகிய உங்கள் கையில் உள்ளது மனிதன் மனிதனாக வேண்டும். "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ன போன்ற வாழ்வை வளையவைக்கும் மதக் கருத்துக்கள் மாணவர்கள் அகத்தினில் தோன்றாத படி வாழ்வைச் செம்மையாக்கும் சீரிய அறிவுடம்பட்ட செவ்விய புதுமைக் கருத்துக்கள் புகுத்தப்படவேண்டும் மாணவர்களின் மனதில். அந்த அரும்பெரும் பணியைச்செய்ப ஆசிரியர்களாகிய நீங்கள் முன் வர வேண்டும். இங்கு ஆசிரியர்--மாணவர்களாகக் கூடியுள்ள நீங்கள் நாட்டைச் சீர்திருத்தும் நல்ல பணியினை இலக்கியத்தின் மூலம் செய்ய முற்பட வேண்டும். அறிவுக்கு இடம் கொடுங்கள். ஆராய்ச்சியினால்தான் இவ்வுலகம், இவ்வளவு பெரியஉலகம் கண்டுள்ளோம். அறிவைசெலவு செய்ததின் பயனாய் விஞ்ஞானம் வந்துள்ளது. ஆராய்ந்து ஆராய்ந்துப்பார்த்து எப்படி மனிதன் வாழ்க்கையில் இன்பம் காண வேண்டும் என்ற முயற்சிக்குக் கருத்தைக்கொள்ள நீங்கள் வழிவகுக்க வேண்டும். சைனாவில் பல கடவுள்கள் இருந்தன, ஐரோப்பாவில் பல கடவுள்கள் இருந்தன, இப்போது கண் காட்சிசாலையில் வைத்துப்பார்க்கிறார்கள் அவர்கள், பழமைக் கருத்துக்களைப் போக்கி, புதுமைக் கருத்துக்களை, அவை எந்தக் காலமாயினும் சரி, அவைகளை எடுத்துப்--பொன்மொழிக்குப் புதுமை ஏற்றி, எதிர்கால வாழ்வை வளமாக்கும் வருங்கால இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு ஊட்டப் பாடுபட வேண்டும். ஒரு முடிவுக்கு வாருங்கள், அறிவைப் பயன்படுத்தி புதுமைகளை வளர்க்கவும், இளைஞர்களுக்குக் கொடுக்கவும் செய்யுங்கள். நாம் வாழ முடியும்; மக்கள் வாழ முடியும் நம் தமிழ் மொழி வாழ முடியும், அறிவுடம்பட்ட புதுமைக் கருத்துக்களை இளம் குழந்தைகளுக்கு ஊட்டி, நாடு நலம் பெற ஆசிரியராகிய நீங்கள் பாடுபட்டால்!"

கழகச்செயலாளர் இறுதியாக நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது.

நீங்கள்

"மாலை மணி"க்கு

சந்தாதாரராக

சேர்ந்துவிட்டீர்களா ?

உடனே உங்கள் பெயரை சந்தாதாரராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

பொதுக்கூட்ட அழைப்பு

இடம் :— திருவல்லிக்கேணி, ஜெனரல் சுவாமிநாயக்கன் தெரு (ஜாம்பஜார் சமீபம்)

காலம் :— **18—11—49** மாலை 5-30 மணி.

தலைவர் :— தோழர் T. N. இராமன்.

பேச்சாளர்:—

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் M. A.,

K. A. மதியழகன் B. A.

வ. உ. சி. படத்திறப்பு:—தோழர் க. ந. இராமநாதன்.

அனைவரும் வருக.

(ஒலிபெருக்கி உண்டு) திராவிட முன்னேற்றக் கழகம், திருவல்லிக்கேணி — கிளை.

தென்னாப்பிரிக்காவில் தன்மானப் போர்

வெள்ளையர் வாய்த்துடுக்குக்குக் கண்டனம்

ஐ. நா. சபை தலையிட்டு ஆவன செய்யுமா ?

தென்னாப்பிரிக்க நில இலாகா அமைச்சர் தோழர் ஸ்டிரைடம் என்பவர் தென்னாப்பிரிக்க இந்தியர்களைக் "கூலிகள்" என்று குறிப்பிட்டாராம். இதைக்கண்டு மனம் சகியாத டிரான்ஸ்வால் இந்தியர் காங்கிரஸ், மேற்படி அமைச்சருக்கு கண்டனத் தீர்மானம் ஒன்றை தந்தி மூலம் தெரியப்படுத்தியிருக்கிறது. அதாவது"

"இந்தியரைக்கூலிகள் என்று குறிப்பிட்டது இந்திய சமூகத்தையே அவமதிப்பதாகும். தென்னாப்பிரிக்க ஐரோப்பியர் மீது இந்தியருக்குத் துவேஷம் உண்டாகவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வார்த்தையை வேண்டுமென்றே நீர் உபயோகப்படுத்தியிருகிறீர். உம்முடைய பேச்சின் காரணமாக இந்தியா, பாகிஸ்தானிலும். இதர ஆசிய நாடுகளிலும் ஆத்திரம் ஏற்படும், அதனால் தென்னாப்பிரிக்காவுக்கு மிகவும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும், உமது வார்த்தை மனித உரிமை சாஸனத்துக்கு விரோதமாகவும் இருக்கிறது. ஆகவே அதை ஐ. நா. ஸ்தாபனம் கவனிக்காமல் இருக்காது."

என்று அத்தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னாப்பிரிக்கா இந்தியரின் சுயமரியாதை வெள்ளையரால் பரிக்கப்படுவது கண்டு இன்னம் வெள்ளையர் மீது தன்மானப் போர் தொடுத்திருக்கும் டிரான்ஸ்வால் இந்தியர் காங்கிரஸை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். இங்கு பொதுவாகத் தென்னாப்பிரிக்க இந்தியர் என்று குறிப்பிடப்படுவோரில் பெரும்பகுதியினர் நம் திராவிட நாட்டவர் என்பதை நாம் விளக்கிக் காட்டத்தேவையில்லை. இவ்விந்திய துணைக்கண்டத்திலிருந்து வெளியேறி வேதனைப்படுவோரில் பெரும்பாலோர் திராவிட மக்களேயாவர்,

இங்குத் திராவிட நாட்டில் திராவிடர், ஆரியத்தால் இழிவு படுத்தப்படுகின்றனர்; இந்த இழிவு இங்கு இன்றல்ல நேற்றல்ல; கடந்த மூப்பதாண்டுகளாக நாம் பாடுபட்டு வருகிறோம். இதே நோக்கில் வெளிநாடு சென்றுள்ள திராவிட மக்கள் வெள்ளையரால் 'கூலிகள்' என்று இழித்துக் கூறப்படுகின்றனர். என்ற செய்தியைத் திராவிடர்களாகிய நாம் அலட்சியமாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் நமது பிரச்சினை திராவிட நாட்டோடு முடிந்து விடுவதல்ல. உலகில் எங்கு யாருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதையும் நாம் கண்டித்தே ஆகவேண்டும், அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் மனித சமுதாயத்தின் தன்மானத்தைக் காக்கக் கடமைப் பட்டவர்களாவோம்.

எனவே, நாமும் அந்தநிறவெறிப் பிடித்த தென்னாப்பிரிக்க அமைச்சரின் அடாத செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்துடன் ஐ. நா. சங்கத்தையும் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறோம். அதாவது, மனித உரிமையையும், மானத்தையும் காக்க வேண்டிய, பொறுப்பு ஐ. ந. சபையைச் சேர்ந்தது. ஐ. நா. சபை தனது கடமையைச் செய்யத்தவறினால் உலகில் அமைதி நிலவாது. அரசியல் விவகாரங்களால்தான் போர் மூளும் என்று சொல்லுவதற்கில்லை. எதிர்காலத்தில் போர்கள் தன்மானத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படக் கூடும். ஆகவே, ஐ. நா. சபைக்கு அமைதியில் நாட்டமிருப்பது உண்மையானால் டிரான்ஸ்வால் இந்தியர், காங்கிரஸின் தீர்மானத்திற்கு மதிப்பு கொடுத்து தென்னாப்பிரிக்க வெள்ளையருக்கு நல்லறிவுப் புகட்ட முன்வரவேண்டும்.

மூல வியாதிக்கு

கருணைகிழங்கு லேகியம்

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரக் கட்டி, நீர்க்கசிவு, ரணம் சுகமாகும். வாய்வு அஜீரணம், மலபந்தம் நீங்கும், மூல உஷ்ணம் தணியும்.

12 நாள் மருந்து ரூ 3—0—0

P S R. பங்கஜம் வைத்தியசாலை. பழனி (S. I.)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.